பக்கங்கள்:11
விலை : 30/-
# காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 04 வெள்ளிக்கிழமை 18.03.2022 கதிர் 133

இனி இது ரகசியம் அல்ல!

‘முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்’ என்று என் பத்தி ஒன்றில் சில தினங்களுக்கு முன்னர் பிரஸ்தாபித்திருந்தேன். அந்த வகையில் இன்னொரு சம்பவம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் என்று தம்மை 2

# கோட்டாவின் கோட்டையை எதிரணி முற்றுகையிடுவதால் ஆட்சி கவிழாது

## நெருக்கடி நிலைமைக்கு விரைவில் தீர்வு என மஹிந்த உறுதி



சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிரணியினர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் செய்வதால் எமது ஆட்சியைக் கவிழ்க்கவே முடியாது.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் அரசுக்கு எதிராக ஜனாதிபதி செயலகம் முன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது ஆட்சியைக் கவிழ்க்க எதிரணியினர் படாதபாடுபடுகின்றனர். அவர்கள், தமது ஆதரவாளர்களை பஸ்களில் ஏற்றிவந்து ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட வைத்துள்ளனர். இதனால் 10







## பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக நீக்கக் கோரி

# காலி, மாத்தறையில் மக்கள் அணிதிரண்டு கையெழுத்து

## சஜித்தும் களமிறங்கி அதிரடி

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குமாறு கோரி கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை காலி மற்றும் மாத்தறையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதில் மூவின மக்களும் அணிதிரண்டு தத்தமது கையெழுத்துக்களைப் பதிவிட்டனர். 10

# பிச்சை எடுக்கும் அரசுக்கு எதற்கு ஆட்சி அதிகாரம்?

## அனந்தி கேள்விக்கணை



சர்வதேசத்திடம் பிச்சை எடுக்கும் அரசுக்கு எதற்கு ஆட்சி அதிகாரம் தேவை?

-இவ்வாறு முன்னாள் வடக்குமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் கேள்வி எழுப்பியுள்ளார். 10

# இன்று யாழ்ப்பாணம் வருகின்றார் பந்துல

(ந.லோகதயாளன்)



வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமையில் 10

# மத்திய வங்கி ஆளுநர் கப்ராலை பதவி விலகுமாறு கோரவில்லை

## வெளியான செய்தி முற்றிலும் பொய் என்கின்றார் ஜனாதிபதி



மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலைப் பதவி விலகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என வெளியாகியுள்ள செய்தி முற்றிலும் பொய்யானதாகும்.

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. நாடு எதிர்நோக்கும் பாரிய பொருளாதாரச் சவால்களை வெற்றிகொள்வதில் 10

# அடம்பனில் யானை தாக்கி குடும்பப் பெண் உயிரிழப்பு

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டம், அடம்பன் பகுதியில் யானை தாக்கிப் படுகாயமடைந்திருந்த குடும்பப் பெண் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

சதனாந்தன் சுதா என்னும் 46 வயது பெண்ணே உயிரிழந்தார். 10

# கோட்டாவுடனான பேச்சு: நிகழ்ச்சி நிரல் வேண்டும்

## கூட்டமைப்பிடம் சுரேஷ் வலியுறுத்து

(இ.கலையமுதன்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேசவுள்ள விடயங்கள் தொடர்பில் நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

- இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் 2

# சவப்பெட்டி அரசியல்வாதிகளை வாக்களித்த மக்கள்தான் வீட்டுக்கு விரட்டியடிக்கவேண்டும்

## முன்னாள் எம்.பி. சுரேஷ் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)



அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை சவப்பெட்டிக்குள் வைத்துப் போராட்டம் நடத்தும் அரசியல்வாதிகளை வாக்களித்த மக்கள் தான் வீட்டுக்கு அனுப்ப வேண்டும். 2

# மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க யோசனை

மின்சாரக்கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான யோசனை எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என மின்சக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது. 2

## இனி இது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துக் கொண்டு அதனடிப்படையில் கட்சியின் மத்திய செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டங்களை எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை (நாளை) கூட்டுவதற்கு வீ. ஆனந்தசங்கரி எடுத்த முயற்சிகளுக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருக்கின்றது.

இனி, கட்சியின் சட்ட ரீதியான நிர்வாகிகள் யார் என்ற விடயத்தை ஒட்டி நீதிமன்றத்தில் அக்கப்போர் நீடிக்கும் என்று எதிர்பார்க்கலாம். வயதாகித் தளர்ந்து, பெரும்பாலும் தனித்துப் போய் நிற்கும் ஆனந்தசங்கரியினால் இந்த சட்டப் போராட்டத்தில் நின்று பிடிக்க முடியுமோ தெரியவில்லை.

ஆனால் சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்சியை இப்படி ஒரு சட்ட முறையில்தான் தட்டிப் பறித்தார் சங்கரி என்பதும் –

சந்திரிகா ஆட்சிக் காலத்தில் இவ்விடயத்தை ஒட்டிய நீதித்துறையின் செயற்பாடு மற்றும் போக்கு நடுநிலைப் பார்வையாளர்களால் மோசமாக விமர்சிக்கப்பட்டது என்பதும் – மறக்கக் கூடியதல்ல.

அப்போது பண்ணிய சட்டத் திருகுதாளம் இப்போது சங்கரிக்கு வாய்க்காது என்பது மட்டும் நிச்சயம்.

அன்று தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற கட்சியின் பெயரை அதன் அப்போதைய பொதுச் செயலாளர் இரா. சம்பந்தன் போன்றோரை ஓரம்கட்டி – ஒதுக்கி – சூறையாடிக் கொள்ள சங்கரியால் இயலுமாக இருந்தது. ஆனால் உண்மையான ஆதரவாளர்களும் மக்களும் அவருக்குப் பின்னால் வரவில்லை என்பதை காலமும் தேர்தல்களும் சங்கரிக்கு உணர்த்தியிருக்கும் என்று நம்புகிறேன்.

சங்கரி அடிக்கடி புலம்புவது போல 2004 பொதுத் தேர்தலில், குழப்பங்கள், மோசடிகள், கள்ளவாக்குகள் எல்லாம் தாராளமாக இடம்பெற்றன என்ற குற்றச்சாட்டுக்கள் எவ்வளவு தூரம் உண்மையோ, அவ்வளவு தூரம் சங்கரி மக்கள் செல்வாக்கை இழந்து வெறும் பெயர் மாத்திரம் மிஞ்சிய அரசியல் தலைவர் என்பதும் உண்மைதான். தொடர்ந்து வந்த அனைத்துத் தேர்தல்களும் அவருக்கு அந்தப் படிப்பினையைத்தான் போதித்தன.

தமிழ் மக்களின் ஏகோபித்த செல்வாக்குப் பெற்ற உதயசூரியன் சின்னத்தையும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயர் அங்கீகாரத்தையும் சட்டத்தில் தாம் பண்ணிய குசும்புத்தனங்களால் பறித்து வைத்துக் கொள்ள இயன்ற சங்கரியால், தமிழ் மக்களின் மனதை நெருங்கக் கூட முடியவில்லை என்பதும் உண்மை. மக்களிலும், ஏனைய அரசியல் தலைவர்களிலும் தவறு என்று எப்போதும் புறணி பாடும் சங்கரியிடம் ஒரு தடவை – 2009 யுத்தம் முடிந்து சில வருடங்களின் பின்னர் – தனியாகச் சந்தித்து ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினேன்.

“ஐயா! விடுதலைப் புலிகள் தீவிர யுத்தம் நடத்திக் கொண்டிருந்த புதிய மிலேனியத்தின் முதல் தசாப்தத்தின் முதல் இரண்டு, மூன்று, நான்கு ஆண்டுகள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு என்று முகவரியிட்டு சளைக்காமல் கடிதங்கள் பல எழுதி அவற்றைப் பகிரங்கப்படுத்தியவர்கள் நீங்கள்தான். அந்தக் கடிதங்களை ஒரு தடவை மீள எடுத்துப் பாருங்கள். அவற்றில் என்ன எழுதி இருந்தீர்கள்? ’தம்பி’ என்று தலைவர் பிரபாகரனை உரிமையுடன் விழித்து, ’தம்பி! இந்தப் போராட்டத்தை இப்படியே அர்த்தமில்லாமல் தொடர்ந்து, நீ அழியப் போகின்றாய்; உன்னுடன் உன்னுடைய இயக்கத்தையும் சேர்த்து அழிக்கப் போகின்றாய்; அது மட்டுமல்ல, அதனுடன் சேர்ந்து மக்களையும் அழிக்கப் போகின்றாய்; அத்தோடு தமிழ்த் தேசமும், தமிழர்களுக்கான அமைதி, சமாதான வாய்ப்புகளும் அழியப் போகின்றன’ என்பதுதான் உங்கள் ஒவ்வொரு கடிதத்திலும் மூல அம்சமாக – சாறாக – பொதிந்திருந்தது. கடைசியில் என்ன நடந்தது? சரி, பிழைகள், காரண, காரியங்கள் எவ்வாறாக இருந்தாலும், நீங்கள் அன்று குறிப்பிட்டவைதானே பின் நாள்களில் நடைபெற்று முடிந்தன? அப்படியாயின், ஐந்தாறு வருடங்களுக்கு பின்னர் நடக்கப் போகின்றவற்றை நேரத்துடன் கணித்துக் கூறிய ‘தீர்க்கதரிசி’ தலைவர் நீங்கள் என்றல்லவா தமிழ் மக்கள் உங்களை மெச்சியிருக்க வேண்டும்? ஆனால் அப்படி நடக்கவில்லையே. மாறாக, உங்களைப் பெரும்பாலான தமிழர்கள் ‘தமிழினத் துரோகி’ என்றுதானே பார்க்கின்றார்கள்? தமிழரின் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்திய தலைவர் என்றுதானே நோக்குகின்றனர்?” என்றேன் நான்.

சங்கரி ஆடிப்போனார். கலக்கத்துடன் தலையசைத்தார்.

“நான் தீர்க்கதரிசனமாக சில விடயங்களைக் கூறியிருந்தேன் என்பதை ஒரு மூத்த பத்திரிகையாளர் சுட்டிக்காட்டினார் என்று நான் வெளியில் குறிப்பிடலாமா?” – எனக் கேட்டார் சங்கரி.

“நிச்சயமாக நீங்கள் குறிப்பிடலாம். தேவையானால் என் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லுங்கள். வாய்ப்புக் கிடைக்கும் போது நான் அதை எழுதுவேன்” என்றேன். (இன்று எழுதியும் விட்டேன்.)

ஆனாலும் என் கேள்விக்கு – ‘தீர்க்கதரிசி’ என்று அழைக்க வேண்டியவரை ‘துரோகி’ என்று மக்கள் ஏன் கருதுகின்றார்கள் என்ற என் வினாவுக்கு – அவரிடம் பதில் இல்லை. நானே காரணத்தையும் சொன்னேன்.

“மக்களுக்குச் சொல்ல வேண்டிய விடயத்தை உரிய சமயம் பார்த்து, உரிய முறையில் சொல்ல வேண்டும். அது உங்களுக்குத் தெரியவில்லை. அதனால் உங்கள் நகர்வுகள் ஒவ்வொன்றும் குள்ள நரித்தன நடவடிக்கையாகவே பார்க்கப்படுகின்றன; பார்க்கப்பட்டன.” – என்றேன் நான்.

அதை அப்போதும் அவர் புரிந்து கொள்ளவில்லை. தொடர்ந்த அவரது அரசியல் செயற்பாடுகள், போக்குகள் அதனையே உறுதிப்படுத்தி நின்றன.

கூட்டணிப் பெயரை எப்படிச் ‘சுத்தி’ சுவீகரித்துக் கொண்டாரோ, அப்படியே அதனை அவர் விரைவில் பறிகொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அப்படித்தான் நடக்கும் போல தோன்றுகின்றது. ‘முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்’ என்பது இதனைத்தானோ?

* * *

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராகத் தமிழ்க் கூட்டமைப்பு முன்னெடுத்துள்ள கையெழுத்துப் போராட்டம் தென்னிலங்கையிலும் வலுவாக சூடு பிடித்திருக்கிறது.

நேற்று காலியிலும் மாத்தறையிலும் இப்போராட்டத்திற்குத் திரண்ட மக்கள் மற்றும் சிங்கள தலைவர்களின் எண்ணிக்கை இதற்குச் சான்று. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட பலர் இதில் கலந்துகொண்டு தேசிய ரீதியான போராட்டமாக இதை மாற்றி இருக்கின்றார்கள். தமிழர்களை அரவணைத்து, நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் துடிப்பாக இருந்த அமரர் மங்கள சமரவீரவின் இல்லத்தில் நேற்று மாலை இந்தப் போராட்டம் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. இனவாதிகளுக்கு மத்தியிலும் இணக்கவாதிகளும் இருக்கின்றார்கள் என்பதை தென்னிலங்கையில் இந்தப் போராட்டத்திற்குக் கிடைத்துவரும் ஆதரவு ஈண்டு குறிக்கின்றது என்று குறிப்பிட்டால் அதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது என்பதுதான் உண்மை.

– மின்னல் –

## மின்சாரக் கட்டணத்தை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மின்சார சபை மற்றும் மின்சக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி ஆகியோருக்கிடையில் நேற்று இடம்பெற்ற பேச்சின்போதே இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை இலங்கை மின்சார சபையால் முன்வைக்கப்பட்டதுடன், கலந்துரையாடலின்போது இது தொடர்பில் பேசப்பட்டுள்ளது. இதற்கமைய இது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்க அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தீர்மானித்துள்ளார்.

## சவப்பெட்டி அரசியல்வாதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை விடுத்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் தமிழ் மக்களுக்கு எஞ்சிய சிறு நன்மை பயக்கும் விடயங்களையும் சவப்பெட்டிக்குள் அடைத்து ஒரு தரப்பு போராட்டங்களை நடத்தி வருகின்றது.

இந்தத் தரப்பு தமிழ் மக்களை நிம்மதியாக வாழ அனுமதிக்கப்போவதில்லை. நடுவீதியில் நிறுத்தவே இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற 13 இற்கு எதிரான போராட்டத்தை நடத்துவதற்காக வெளிநாடுகளில் இருந்து பெருமளவு பணம் அனுப்பப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.

அதுமட்டுமல்லாது வவுனியாவில் நடைபெற்ற போராட்டத்துக்கு மட்டக்களப்பு மற்றும் மூதூர் பகுதிகளிலிருந்து மக்களை பஸ்களில் அழைத்து வந்து போராட்டத்தை நடத்தியிருக்கின்றனர்.

13ஐ வேண்டாம் எனக் கூறுபவர்கள் 13 இற்கு மாற்றீடாக எதைக் கொண்டு வரப் போகின்றோம், எவ்வாறு கொண்டு வரப் போகின்றோம் எனக் கூற முடியாதவர்களாக உள்ளனர்.

கடந்த புதன்கிழமை நாட்டின் ஜனாதிபதி மக்கள் முன் உரையாற்றிய நிலையில் அவரின் உரையைக் கேட்ட சிங்கள மக்கள் உரையாற்றிவிட்டு வீட்டுக்குச் செல்லுங்கள் எனக் கூறும் நிலை ஏற்பட்டுவிட்டது.

மக்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் வீதியில் நிற்கும் நிலையில் ஜனாதிபதியின் உரையில் நாட்டை மீட்பதற்கான காத்திரமான திட்டங்கள் இல்லை.

நாட்டின் உயரிய பதவியில் இருப்பவரால் நாட்டை சிறந்த முறையில் வழிநடத்த முடியாவிட்டால் கதிரைக்குப் பாரமாக இருப்பதைவிட வீடு செல்வதே வாக்களித்த மக்களுக்குச் செய்யும் நன்றியாக இருக்கும்.

அதேபோல் சிங்கள மக்கள் தாம் அரியணையில் அமர்த்தியவரை வீடு செல்லுமாறு கூறும் நிலையில் மக்களைத் தவறான பாதையில் இட்டுச்செல்லும் சவப்பெட்டி அரசியல்வாதிகளையும் மக்கள் வீட்டுக்கு அனுப்ப வேண்டும். – என்றார்.

## கோட்டாவுடனான பேச்சு: .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினருமான க.சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தினார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குக் கௌரவமான தீர்வு வழங்க இந்த அரசு தயாராக இல்லை. தமிழ் மக்களை இந்த அரச தரப்பினர் மிகவும் மோசமாகத்தான் நடத்துகின்றனர். ஒரு பேச்சுக்கான சரியான ஒரு சூழலைக்கூட இந்த அரசால் உருவாக்க முடியவில்லை.

ஒரு பக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பேச்சுக்கு அழைத்துக்கொண்டு மறுபக்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களிடம் மரணச் சான்றிதழும், ஒரு இலட்சம் ரூபா பணமும் வழங்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது. இந்த நடவடிக்கை பாதிக்கப்பட்ட மக்களை மேலும் மேலும் துன்பத்துக்கு உள்ளாக்கக் கூடிய விடயம்.

எனவே, காணி கபளீகரம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம், பொருளாதார நெருக்கடி குறித்தும் ஜனாதிபதியுடன் பேச்சுக்குச் செல்லவுள்ள தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேசவுள்ள விடயங்கள் தொடர்பில் நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

என்னென்ன அமைச்சு சார்ந்த விடயங்களில் பிரச்சினைகள் உள்ளன என்பதைத் தீர்மானித்து முன்னரே ஜனாதிபதியிடம் அறிக்கையாகக் கொடுக்கும்போது அது சார்ந்த அமைச்சர்களும் பேச்சில் பங்கேற்று ஒரு தீர்க்கமான முடிவொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும். – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
மின்னஞ்சல் –
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் –
076 443 8622

சிறுநீரகம் தேவை
31 வயது இளைஞர் ஒருவருக்கு
ஓ பொசிட்டிவ் ($O^+$) ரக சிறுநீரகம்
ஒன்று தேவை.
வழங்க முன்வருபவர்கள்
076 237 6603
என்னும் தொலைபேசி இலக்கங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.



# சபரிமலை

# ஸ்ரீ ஐயப்பன் ரேடர்ஸ்

## Sabarimalai Sri Iyappan Traders

இல.315, கண்டிறோட்,
கிளிநொச்சி.

No. 315, Kandy Road,
Kilinochchi.

**Tel:- 021 228 3701,076 307 8091**




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்

**077 986 2476 - 077 983 8091** எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.

**076 307 8091, 021 228 3701, 077 986 2470**

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# என்ன செய்யப் போகிறது ரெலோ?

**தமிழ் கூட்டமைப்பின் உள்விடயங்கள் குறித்து வெளிப்படையாகக் கருத்து வெளியிடாமல் மௌனம் காத்து வந்த கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இப்போது பகிரங்கமாகவே வெடித்திருக்கிறார். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவருக்கும் செயலாளருக்கும் அவர் பகிரங்கமாகப் பதிலடி வழங்கியிருக்கிறார்.**

**"ஜனாதிபதியை நேரில் சந்திக்க முன்னர், அவருடன் பேச உள்ள விடயங்களைக் கடிதம் மூலம் அவருக்கு தெரியப்படுத்தலாம். அதற்கு ஜனாதிபதி வழங்கும் பதிலைப் பொறுத்து ஜனாதிபதியைச் சந்திப்பதா, இல்லையா என்பதைத் தீர்மானிக்கலாம். இப்படி ஆயத்தம் இல்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியைச் சந்திக்க நினைப்பது தவறு" – என்ற சாரப்பட ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பியும், செயலாளர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) எம்.பியும் தெரிவித்த கருத்துகளுக்கு நேரடியாகப் பதிலடி தந்திருக்கிறார் சம்பந்தன்.**

**"தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் ஜனாதிபதியுடனோ அல்லது வேறு எந்தர் தரப்புடனோ எந்த நேரத்திலும் பேச்சு நடத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவே உள்ளது. அரை நூற்றாண்டு காலமாக தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்களில் முழு மனதுடன் ஈடுபடும் கட்சியாக நாம் சகல சந்தர்ப்பங்களிலும் எமக்கு கிடைக்கும் வாய்ப்புகளை சரியாக பயன்படுத்திக்கொள்ளவே நினைக்கின்றோம். இலங்கையில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களிடமும், சர்வதேசத்திடமும் தொடர்ச்சியாக எமது நிலைப்பாடுகளை சரியாக முன்வைத்து வந்துள்ளோம். இது தமிழர் தரப்புக்கும் நன்றாகத் தெரியும்.**

**"அவ்வாறு இருந்தும் முன் ஆயத்தம் இல்லாது தமிழ் தேசிய கூட்டமைப்பு ஜனாதிபதியைச் சந்திக்க நினைப்பது தவறென்ற விதத்தில் ஒரு சிலர் கருத்துக்களைக் கூறியுள்ளனர். தேசிய பத்திரிகையில் அவர்களின் நிலைப்பாடு வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் இது முற்றிலும் தவறான கருத்தாகும். தமிழ் தேசியக் கூட்டமைப்பு எப்போதுமே முழு ஆயத்தத்துடன், தமிழர் அரசியல் தீர்வு விடயங்களில் எமது நிலைப்பாடு என்ன என்பதை முன்நிறுத்தியே எந்தத் தரப்புடனும் பேச்சுக்குச் செல்லும் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.**

**"ஜனாதிபதியுடன் நாம் பேச்சுக்களை முன்னெடுப்பது எவரேனும் ஒரு கட்சிக்கு பிடிக்கவில்லை என்றால் – அவர்களுக்குப் பேச்சுகளில் ஈடுபட விருப்பம் இல்லை என்றால் – அவர்கள் தாராளமாக தீர்மானம் எடுக்க முடியும். கூட்டமைப்பில் சகல பங்காளிக் கட்சிகளுக்கும் அந்த உரிமை உள்ளது. அதனை நாம் எப்போதுமே தடுத்தவர்களும் அல்லர். ஆனால் அவர்கள் தாம் பேச்சுக்கு வரவில்லை என்பதற்காக, ஆயத்தம் இல்லாது பேச்சுகளை முன்னெடுக்கின்றோம் என எம்மை விமர்சிக்க முடியாது. அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டிக்கின்றது."**

**– இப்படி கூட்டமைப்புத் தலைவராக ரெலோவுக்கு பதிலடி கொடுத்திருக்கிறார் சம்பந்தன். இப்பதில் மூலம் ரெலோவுக்கு சில தெளிவான விளக்கங்களையும் சம்பந்தன் கூற முற்பட்டிருக்கின்றார் எனக் கருதலாம்.**

**'ஜனாதிபதி உடனான பேச்சுக்கு நீங்கள் விரும்பினால் வரலாம். விரும்பாவிட்டால் வராமல் நிக்கலாம். அது குறித்து நாம் அலட்டிக் கொள்ளவே மாட்டோம். உங்களை வற்புறுத்தவும் மாட்டோம். ஆனால் அதற்காக ஆயத்தம் இல்லாமல் நாம் செயற்படுகின்றோம் என்று எங்களை விமர்சிக்க முற்படாதீர்கள்' என்பதுதான் சம்பந்தனின் தெளிவான செய்தி.**

**இந்த பேச்சுக்கு வர ரெலோ மறுப்பது குறித்து ஆரம்பத்தில் செய்தி வெளியானது போது அது குறித்து சம்பந்தனிடம் கேட்கப்பட்டது. சம்பந்தன் பதிலளிக்க மறுத்து அரசியல் நாகரிகம் பேணினார். ஆனாலும் பங்காளிக் கட்சியாக இருந்து கொண்டு அவரின் அரசியல் நிலைப்பாட்டை ரெலோ பகிரங்கமாக விமர்சிக்க முற்படும் போது அதற்கு சரியான பதிலடி கொடுக்க அவர் பின்நிற்கவில்லை.**

**கூட்டமைப்புக்குள் ரெலோ இத்தகைய குசும்புத்தனங்களைத் தொடர்ந்து பண்ணுமானால் கூட்டமைப்பின் கதவுகள் – சலூன் கதவுகள் போல – எந்தப் பக்கமும் போய் வரக்கூடியதாக திறந்திருக்கும் என்ற செய்தியை ரெலோவுக்கு சொல்லவும் சம்பந்தம் பின்னிக்க மாட்டார் என்றே தோன்றுகின்றது. என்ன செய்யப் போகிறது ரெலோ?**

# மனித நேயத்துக்கு அப்பாற்பட்ட ஒருவரே நாட்டின் நீதி அமைச்சர்!

## கலையரசன் எம்.பி. சாடல்



காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் மரணித்தவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா கொடுப்பனவு எனத் தெரிவித்த நீதி அமைச்சர் ஒட்டுமொத்த தமிழினத்தை மலினப்படுத்துத்தி மனித நேயத்துக்கு அப்பாற்பட்டு செயற்படுகின்ற ஒருவர் என்பதுடன், தமிழர்களுடைய உயிர் ஒரு லட்சம் ரூபா பெறுமதியா? என நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

காணாமல் போனோரின் உறவுகளுக்கு அரசால் ஒரு லட்சம் ரூபா இழப்பீடு வழங்கும் யோசனையை நீதி அமைச்சர் அமைச்சரவையில் முன்வைத்தார். இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

இந்த நாட்டின் நீதி அமைச்சர் காணாமல் போனோர் தொடர்பாக அமைச்சரவையில் முன்வைத்த யோசனை ஒட்டுமொத்த தமிழினத்தை மலினப்படுத்துகின்ற விடயமாகும் என்பதுடன் தமிழர்களை இவர்கள் எவ்வாறு எந்தளவுக்கு வைத்திருக்கின்றார்கள் என்பது இந்த நீதி அமைச்சர் வெளியிட்டிருப்பது ஒரு வேதனையான கவலையான விடயம்.

அதேவேளை, தமிழர்களுடைய உயிர் ஒரு லட்சம் ரூபா பெறுமதி என்ற அடிப்படையில் இவர்கள் கையாளுகின்ற விடயத்தை நாங்கள் மனவேதனையுடன் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அரசாங்கம் அதுசம்பந்தமாக எந்தவிதமான நியாயமான ஒரு விடயங்களையும் கையாள்வதற்குத் தயாரில்லை என்ற அடிப்படையில் உள்ளது.

இந்த நிலையில் இன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எமது உறவுகள் நீண்ட காலமாக அவர்களது நியாயங்களைப் பெற்றுத்தரவேண்டும் என சர்வதேசத்தைக் கோரி வருகின்றனர். இவ்வாறு சர்வதேசத்தை கோரிவரும் இந்தக் கால கட்டத்தில் இந்த நீதி அமைச்சர் முன்வைத்திருக்கின்ற விடயம் எமது தமிழினத்தை மிக மோசமாக இந்த அரசாங்கம் நடத்துகின்றது என்பதை விடயத்தை இதன்மூலமாகஎடுத்துரைத்துள்ளனர்.

காணாமல் போன உறவுகள் மற்றும் மனித உயிர்களைப் பறிகொடுத்த சமூகத்தை மோசமான ஒரு சூழலுக்கு இட்டுச்செல்லும் என்பதுடன் மரணித்தவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா கொடுப்பனவு எனத் தெரிவித்த நீதி அமைச்சர் ஒரு மனித நேயத்துக்கு அப்பாற்பட்டவர் என்பதைக் காட்டுகின்றது.

எனவே, இவ்வாறு நாட்டில் ஒரு நீதி அமைச்சர் ஒட்டுமொத்த தமிழினத்தை மலினப்படுத்துகின்ற விடயமாக செயற்படுகின்ற நடவடிக்கையை கைவிடவேண்டும். – என அவர் தெரிவித்தார்.

# புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தாதுகோபுர கலசம் திறப்பு



ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தாது கோபுரத்தின் கலசம் திறந்து வைக்கும் நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவால் பிரித் பாராயணத்துக்கு மத்தியில் கலசம் திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பிரதமர் புதிய தாது கோபுரத்துக்கு முதலாவது மலர் பூஜை நடத்தினார்.

கோட்டே ஸ்ரீ கல்யாணி சாமஸ்ரீ சங்க சபையின் மஹாநாயக்கர் வணக்கத்திற்குரிய இத்தேபானே தம்மாலங்கார மஹாநாயக்க தேரர், மல்வத்து விகாரை பீடத்தின் அனுநாயக்கர் நியங்கொட விஜிதசிறி அனுநாயக்க தேரர் உள்ளிட்ட மஹாசங்கத்தினர் இதன்போது பங்கேற்றனர்.

# இலங்கைக்கு பயணம் செய்வது தொடர்பில் தமது பிரஜைகளுக்கு கனடா ஆலோசனை

சீரழிந்து வரும் பொருளாதார நெருக்கடியை சுட்டிக்காட்டி இலங்கைக்கு பயணம் செய்யும் தமது பிரஜைகளுக்கு கனடா பயண ஆலோசனை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பொருளாதார நிலைமை மோசமடைந்து வருவதால் மருந்துகள், எரிபொருள், உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நெருக்கடி காரணமாக கடைகள், எரிவாயு நிலையங்கள் மற்றும் மருந்தகங்களில் நீண்ட வரிசைகள் இருக்கலாம் என கனடா தெரிவித்துள்ளது.

மின்சாரம் இன்மை, பொருளாதார ஸ்திரமின்மை, சுகாதாரம் உட்பட பொது சேவையில் பாதிப்பு ஏற்படலாம் என்றும் கனடா சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த கால தாக்குதல்களின் அடிப்படையில், பயங்கரவாத தாக்குதல்களுக்கான அதிக சாத்தியம் இருப்பதாகவும் கனடா அறிவுறுத்தியுள்ளது. முன்னதாக பிரஜைகள் இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டாம் எனத் தெரிவித்து பயண ஆலோசனையை பிரித்தானிய அரசாங்கம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு பாரிய வெற்றி!

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் பிரதிநிதிகள் குழு முன்வைத்த தர்க்கரீதியான விடயங்கள் மூலம் நாட்டுக்கு பாரிய வெற்றியை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் அடிக்கடி பல்வேறு அறிக்கைகளை கோருவதன் மூலமான பயன்கள் என்ன? நாடு ஒன்றின் உள்ளக விடயங்களில் இந்த வகையில் அழுத்தங்களை மேற்கொள்வதன் நோக்கம் என்ன? அனைத்து நாடுகளையும் ஒரே மாதிரி கருதி இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு உட்படுத்துவது போன்ற விடயங்களை இந்தக் குழுவினர் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் பிரதானியிடம் கேள்வி எழுப்பினர் எனவும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெளிவுபடுத்தினார்.

மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு ஆதரவாக 45 நாடுகளில் 32 நாடுகள் ஆதரவு தெரிவித்தன என சுட்டிக்காட்டிய அமைச்சர், நாட்டை காட்டிக்கொடுப்பதற்கு சமகால அரசாங்கம் உடன்பட்டிருந்தால் எஞ்சிய நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் கூறினார். நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு சமகால அரசாங்கம் எந்த வகையிலும் தயார் இல்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் அலுவலகத்தின் ஊடாக விடுக்கப்படும் அறிக்கையின் சில விடயங்களில் உடன்பட முடியாது என்று சுட்டிக்காட்டிய அமைச்சர், ஆணையாளர் இந்த அறிக்கையில் உள்ளடக்கியுள்ள பெரும்பாலான


பீரிஸ் பெருமிதம்

விடயங்கள் இலங்கையின் உள்ளக நடவடிக்கைகள் தொடர்பானவை. இந்த விடயங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் விடயங்களுக்கு எந்தவகையிலும் பொருத்தமற்றவை என்றும் குறிப்பிட்டார்.

இது மாத்திரமன்றி 3 இல் 2 பெரும்பான்மை மக்களின் பலத்தைப் பெற்றுள்ள சமகால அரசாங்கத்தில் தலையீடுகளை மேற்கொள்வதற்கு சர்வதேசத்துக்கு எந்த வகையிலும் உரிமை இல்லை என்றும் நாட்டின் உள்ளக விடயங்கள் தொடர்பில் விமர்சனங்களை மேற்கொண்டு அறிக்கைகள் முன்வைக்கப்படுவது பொருத்தமற்றவை என்றும் அவர் கூறினார்.

இது ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை சட்டங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் நேரடியாக முரண்பட்டதாகும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் அட்மிரல் பேராசிரியர் ஜயனாத் கொலம்பகே உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## மத்திய வங்கி ஆளுநரை பதவி விலக கோரவில்லை!

### ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவிப்பு

மத்திய வங்கி ஆளுநரை பதவி விலகுமாறு ஜனாதிபதி கோரவில்லைஎனஜனாதிபதிஊடகப்பிரிவுதெரிவித்துள்ளது.

அவ்வாறான செய்திகளில் உண்மையில்லை எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மத்திய வங்கி ஆளுநரை உடனடியாக பதவி விலகுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்திருந்தார் என முன்னதாக தகவல்கள் வெளியாகியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தான் தொடர்ந்தும் மத்திய வங்கி ஆளுநராக செயற்பட்டு வருகின்றேன் என அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டத்திற்கு நீதிமன்றம் தடை!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரியால் சனிக்கிழமை கிளிநொச்சியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்குழு மற்றும் மத்திய செயற்குழு கூட்டத்துக்கு கிளிநொச்சி நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகத்தால் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்களை ஓரம் கட்டிவிட்டு, கட்சிக்கு எந்த விதத்திலும் சம்பந்தம் இல்லாத புதிய உறுப்பினர்களை கட்சியின் முக்கிய பதவிகளுக்கு இணைக்க எடுத்து வரும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டு கட்சியைக் காப்பாற்ற புதிய நிர்வாகம் செயற்பட்டு வருகின்றது.

இதன்தொடராககிளிநொச்சியில்பிறிதொருகுழுவினரிடம் கட்சியை கையளிக்கும் நடவடிக்கையாக 19 ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்குழு மற்றும் மத்திய செயற்குழு கூட்டத்துக்குத் தடை விதிக்கக்கோரி புதிய நிர்வாகத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு 16 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது கிளிநொச்சி நீதிமன்றம் மேற்படி கூட்டத்தை நிறுத்துமாறு தடை விதித்துள்ளது.

புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு கட்சியின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மக்களின் அரசியல் அபிலாஷைகளை அடைவது தொடர்பில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவரும் நிலையில் கட்சியின் முன்னாள் செயலாளர் நாயகம் இதனைக் குழப்பும் வகையில் செயற்படுவது அனைவருக்கும் தெரிந்ததே. (மற்றொரு செய்தி 06ஆம் பக்கத்தில்)

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 21 அராலி வீதி ஆதன இல 50/31 என்ற ஆதன இலக்கத்தை கொண்ட ஆதனம் எமது பதிவேட்டில் சொந்தக்காரர் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு அருளம்பலம் இராஜரட்ணம் முகதாவில் 2998ம் இலக்க 05.05.2005ம் திகதியிட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் முகமட் யூசுப் சமீன் என்பவர் இவ்வாதனம் தனக்கு உரித்தானது என வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த முகமட் யூசுப் சமீன் பிரசித்த நொத்தாரிசு யோகநாதன் சத்தியநாதன் முகதாவில் வழங்கப்பட்ட 1269ம் இலக்க 08.03.2006 ந் திகதியிட்ட அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தை முத்துலிங்கம் இரவீந்திரன் பெண் செல்வதிக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்** :- வடமாகாண யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை "பாம்படி மயிலன் புங்கடி" உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆ.நவரட்ணம் 20.05.1989 திகதியில் அளந்த 7 துண்டுகளாக பிரிவிட்டு வரைந்த 1207 இலக்கப் படத்தின் படி நெற்.பர.62 குளி 0.02 இதில் துண்டு "1" என்று சுட்டப்பட்ட பாகம் நெற்.பர.14 குளி 11.40 இதில் கிழக்கு பக்கமாக நெற்.பர.08 குளி 06 இனை உத்தரவு பெற்ற நில அளவையாளர் பி.தனராஜா 30.04.2005 திகதியில் அளந்து 06 துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு வரைந்த 2743ம் இலக்கப் படத்தின் படியும் விஸ்தீரணம் நெற்.பர.8 குளி 6 இல் குறித்த 2743ம் இலக்கப்படத்தின் படி துண்டு 4 என சுட்டிக்காட்டப்பட்ட பாகம் நெற்.பர.(2) இரண்டும் அதற்குரியவைகளும் இதன் எல்லை

**கிழக்கு :- 12 அடி அகலமான ஒழுங்கை**
**வடக்கு :- குறித்த 2743ம் இலக்கப் படத்தில் துண்டு 3 எனச் சுட்டப்பட்டதும் சீனி முகமது அபூகாதிர் ஆதனம்.**
**மேற்கு :- இதன் மிகுதியான ஆதனம்.**
**தெற்கு :- குறித்த 2743ம் இலக்கப் படத்தின் துண்டு 5 எனச் சுட்டப்பட்ட பாகம் இவ் எல்லைகளும் இதடங்கலும்.**

தற்போது முத்துலிங்கம் இரவீந்திரனின் பெண் செல்வதி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/ முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடாத்து குறித்த ஆதனமானது இரவீந்திரன் பெண் செல்வதி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப் பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**

## பணம் செலுத்தப்பட்டுவிட்டது எரிவாயு தட்டுப்பாட்டுக்கு தீர்வு



கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள எல்.ஜி. எரிவாயு கப்பல்களுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி செயலாளர் காமினி செனரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, எரிவாயு தரையிறக்கப்பட்டு விரைவில் சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## கொரோனாவைக் கட்டுப்படுத்தி வைரஸைக் கொல்லும் தொப்பி!

### இலங்கையில் தயாரிப்பு



இலங்கையில் கொவிட் வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்தி வைரஸைக் கொல்லக்கூடிய விசேட தொப்பி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

விசேட இரசாயனங்களைப் பயன்படுத்தி இந்தத் தொப்பி தயாரிக்கப்பட்டுள்ளதாக விசேட வைத்திய நிபுணர் சனத் ஹெட்டிகே தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இரசாயன எதிர்ப்புத் தொப்பியைப் பயன்படுத்தினால், தலை, கழுத்து மற்றும் நெற்றியில் தொற்று ஏற்படுவது தடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வைரஸ் காற்றுப்பாதையில் நுழையும் அபாயத்தை இந்த தொப்பி குறைக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொவிட் மாத்திரமன்றி ஆபத்தை ஏற்படுத்தும் எந்த வகையான வைரஸாக இருந்தாலும் அதனை இந்தத் தொப்பி கட்டுப்படுத்திவிடும் என அவர் கூறியுள்ளார்.

இதனை அணிந்து அலுவலகத்துக்குச் சென்று மேசை மீது வைத்து விட்டாலும் வைரஸ் நெருங்க முடியாதென அவர் தெரிவித்துள்ளார்.

விரைவில் இதனை சந்தைக்கு விநியோகிக்க மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என விசேட வைத்திய நிபுணர் சனத் ஹெட்டிகே மேலும் தெரிவித்துள்ளார்.

# எம் இனத்தின் இருப்பு கேள்விக்குரிய ஒன்றே!

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு



எம் இனத்தின் இருப்பு கேள்விக்கு உட்படுத்தப்படுகிறது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் பூநகரி பிரதேச அமைப்பாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் (புதன்கிழமை) பூநகரியில் இடம்பெற்றது மேற்படி சந்திப்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் போகமாட்டோம் என்று மார்தட்டியவர்கள் இன்று சர்வதேச நாணய நிதியத்தின் காலடியில் வீழ்ந்து இருக்கிறார்கள்.

இலங்கையில் மக்கள் இன்று எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் வரிசையில் நிற்கிறார்கள். எரிவாயுவிற்காக வரிசையில் நிற்கிறார்கள், அத்தியாவசியப் பொருள்களை வரிசையில் நின்று தான் வாங்க வேண்டும் என்கிற நிலை இப்போது உருவாகியிருக்கிறது. பொருளாதார நிலையில் அதளபாதாளத்திற்கு சென்றுள்ளது.

இப்படி இக்கட்டான நேரத்திலும் எம் இனத்தின் வாழ்க்கை என்பது அழிக்கப்பட்டுக்கொண்டே செல்கிறது எங்களை நோக்கி புத்த கோவில்கள் வருகின்றன. எங்கள் இடங்களில் கொரோனாக் காலங்களில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு மற்றும் பயணத்தடைகளின் போது முளைத்த இராணுவ சோதனைச் சாவடிகள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளன.

வனவளத்திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் தொல்லியல் திணைக்களம் போன்றன தமிழர்களின் நிலங்களைப் பறித்து விவசாயம் செய்வதற்குத் தடையாக இருக்கிறார்கள். முழுமையாக ஓர் இராணுவ மயப்படுத்தப்பட்ட இராணுவ நியமனங்களால்தான் நாடு இன்று இவ்வாறான அழிவைச் சந்தித்துள்ளது. – எனத் தெரிவித்தார்.

# இனி திண்மக் கழிவகற்றல் நடவடிக்கையை தள்ளுவண்டில்களில் முன்னெடுக்க முடிவு

## கல்முனை மாநகரசபை தீர்மானம்




கல்முனையில் திண்மக்கழிவகற்றல் நடவடிக்கையை தள்ளு வண்டிகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பொது மக்களை குறித்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு நல்குமாறு கல்முனை மாநகர சபை கேட்டுள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கல்முனை மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் சேவையை தொடர்ந்து தடங்கல் இன்றி முன்னெடுக்க தள்ளு வண்டிகளில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை தொடக்கம் இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் சமயலறைக் கழிவுகளில் துர்நாற்றம் வீசக்கூடிய குப்பைகளை மாத்திரம் இத்தள்ளு வண்டிகளில் ஒப்படைத்து முழுமையாக ஒத்துழைப்பு வழங்குமாறு பொது மக்களிடம் கல்முனை மாநகர சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டில்கடந்த இரண்டுவருடங்களாக கொரோனா பெருந்தொற்று அசாதாரண சூழ்நிலைக்கு மத்தியிலும், அதனால் ஏற்பட்ட வருமானம் இழப்பு, நிதிப்பற்றாக்குறை போன்ற பல்வேறு சவால்கள், நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கல்முனை மாநகர சபை, மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீபின் ஆலோசனை, வழிகாட்டலில், சுகாதாரப் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் அர்ப்பணிப்பு, தியாகத்துடன் கூடிய பணியாற்றல் காரணமாக தனது திண்மக்கழிவகற்றல் சேவையை தொய்வின்றி மிகவும் சிறப்பாக முன்னெடுத்து வந்திருக்கிறது.

அவ்வாறே அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கல்முனை மாநகர சபையும் தனது வாகனங்களுக்கான எரிபொருள்களை கொள்வனவு செய்வதில் இடர்பாடுகளை எதிர்கொண்டிருந்த போதிலும் கல்முனை மாநகர சபை இருபதுக்கு மேற்பட்ட திண்மக்கழிவகற்றல் வாகனங்கள் மூலம் கழிவகற்றல் சேவையை திருப்திகரமாக முன்னெடுத்து வந்துள்ளது.

எனினும் கடந்த சில நாள்களாக மாநகர சபையின் இவ்வாகனங்களுக்குத் தேவையானளவு டீசலைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு, மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், அவசர மாற்று ஏற்பாடாக 16 ஆம் திகதி தொடக்கம் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட 06 வலயங்களிலும் 24 தள்ளுவண்டிகளைக் கொண்டு, சமயலறைக்கழிவுகளை, அதிலும் துர்நாற்றம் ஏற்படக்கூடிய கழிவுகளை மாத்திரம் சேகரித்து, அகற்றுவதற்கு மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

இதன்படி உக்கும் கழிவுகளாயினும் உக்காத கழிவுகளாயினும் துர்நாற்றம் ஏற்படாத குப்பைகள் அனைத்தையும் மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் வாகனங்கள் வழமை போன்று சேவையில் ஈடுபடுத்தப்படும் வரை பொது மக்கள் தமது வீடுகளிலேயே வைத்து, முகாமை செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

இந்த மாற்று ஏற்பாட்டின் ஊடாக மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே குப்பைகளை சேகரித்து அகற்ற முடியுமாக இருக்கும். இதனால் பெருமளவு குப்பைகள் தேக்கமடையும். அவற்றை டீசல் விநியோகம் வழமை நிலைக்கு திரும்பிய பின்னர் மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் வாகனங்கள் மூலம் சேகரித்து, அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, நாட்டின் இன்றைய இக்கட்டான சூழ்நிலையைப் புரிந்து கொண்டு, கல்முனை மாநகர சபையின் இந்த மாற்று ஏற்பாட்டுக்கு மாநகர வாழ் பொது மக்கள் அனைவரும் முழுமையாக ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும் என மாநகர சபை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

எனினும் இத்தள்ளுவண்டி விவகாரம் தற்போது மக்கள் மத்தியில் கடும் விமர்சனத்தை தோற்றுவித்துள்ளதுடன் ஆளணி மற்றும் தள்ளுவண்டிகளின் எண்ணிக்கை தொடர்பில் விசனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

# தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் பொதுச்செயலராக ஆனந்த சங்கரி!



தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் பொதுச்செயலாளராக வீ.ஆனந்த சங்கரி தேர்தல்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு கூடிய போதே, இதுதொடர்பான உத்தியோகப் பூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதுதவிர, 2022ஆம் ஆண்டு அரசியல் கட்சியாக பதிவு செய்வதற்காக குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் விண்ணப்பிக்கப்பட்டிருந்த 3 கட்சிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்காக 76 விண்ணப்பங்கள் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பீங்கான் பாத்திரங்கள், எரிவாயு சிலிண்டர்களுடன் ஜனாதிபதி காரியாலயம் முன் கூடாரம் அமைப்போம்!

## கொத்து தயாரிப்போம் எனவும் எச்சரிக்கை விடுத்தது இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம்

நாடு பூராகவும் அமைந்திருக்கும் சிற்றுண்டிச்சாலைகளின் பீங்கான் பாத்திரங்கள் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டர்களை எடுத்துக் கொண்டு வந்து ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக கூடாரம் அமைப்பதுடன் உணவக பொருள்களைக் கொண்டு வந்து, விறகு அடுப்பில் கொத்து தயாரிப்போம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

சமையல் எரிவாயு இன்மையால் சிற்றுண்டிச்சாலைகளில் உணவு வசதிகளை இன்று முதல் முற்றாக நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சிற்றுண்டிச்சாலைகளை மூடிவிட வேண்டிய நிலை ஏற்பட்டால் சுமார் 5 லட்சம் பேரின் தொழில் இல்லாமல்போகும் அபாயம் உள்ளது.

அதனால் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் மற்றும் அதில் பணிபுரியும் ஊழியர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கு அரசாங்கம் உடனடியாகத் தீர்வை வழங்க வேண்டும்.

எரிவாயு பிரச்சினை காரணமாக இன்று வரை சுமார் 5 ஆயிரத்துக்கும் அதிகமான உணவகங்கள் மூடப்பட்டுள்ளன.

வீடுகளில் உணவுப் பொருள்களை தயாரித்து விற்பனை செய்யும் ஆயிரக்கணக்கானோரும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனச் சுட்டிக்காட்டினார்.

# விபத்தில் காயமடைந்த மாணவனுக்கு உணவு வழங்கும் பொலிஸ் அதிகாரி!

## குவிகின்றன பாராட்டுக்கள்



பொலிஸ் அதிகாரி ஒருவர் பாடசாலை மாணவன் ஒருவனுக்கு உணவளிக்கும் படங்கள் இணையத்தில் வெளியாகி வைரலாகியுள்ளன.

விபத்தில் காயமடைந்த மாணவன் ஒருவனுக்கு நவகமுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் லக்ஷ்மன் டி சில்வா இவ்வாறு உணவளித்துள்ளார்.

கடுவலை முனிதாச குமாரதுங்க வித்தியாலயத்திற்கு முன்பாக குறித்த மாணவன் பஸ்ஸில் இருந்து தவறி விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளான்.

இதன்போது நவகமுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாடசாலைக்கு முன்பாக போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்தார்.

விபத்தை நேரில் பார்த்த அவர் , சிறுவனை ஜீப்பில் ஏற்றி நவகமுவ வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளார்.

அங்கு மாணவனுக்கு சிகிச்சை அளித்த பின்னர், மாணவன் பசியுடன் இருந்தமையை உணர்ந்து அங்கிருந்த உணவகத்துக்கு மாணவனை அழைத்துச் சென்று இவ்வாறு உணவளித்துள்ளார்.

பின்னர் மாணவனின் பெற்றோரை வரவழைத்து, மாணவனை பெற்றோரிடம் ஒப்படைத்து விட்டு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீண்டும் பணிக்கு சென்றுள்ளார்.

# சரிந்து செல்கின்றது அரசின் செல்வாக்கு

## கோட்டாவின் கையில் புலனாய்வு அறிக்கை



நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பான புலனாய்வு அறிக்கை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையானது அரசுக்கு அவ்வளவு நல்லதாக இல்லை என்றே கூறப்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் அரசுக்கான செல்வாக்கு நாளாந்தம் வீழ்ச்சியடைந்து வருகின்றது எனவும், தீவிர ஆதரவை வெளிப்படுத்தியவர்கள்கூட மாற்று வழியை நாடுகின்றனர் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோல் அரசு மீது மக்கள் அதிருப்தியில் இருப்பதால், ஐக்கிய மக்கள் சக்திக்கான ஆதரவு 17 வீதத்தால் அதிகரித்துள்ளது எனவும் புலனாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சரவையில் இருந்து விலக்கப்பட்டுள்ளதால், அரசின் வாக்கு வங்கிக்கு ஏற்படும் தாக்கம் பற்றி தற்போதே ஒரு முடிவுக்கு வரமுடியாது எனவும் மேற்படி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

# காஸ் தட்டுப்பாட்டால் மூடப்படும் ஹோட்டல்கள் 5 இலட்சம் பேர் தொழிலை இழக்கும் பேராபத்து

நாட்டில் சமையல் எரிவாயுவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால், ஹோட்டல்களும், சிறு அளவிலான உணவுவிற்பனை நிலையங்களும் மூடப்பட்டு வருகின்றன. எதிர்காலத்திலும் எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்பதால் ஹோட்டல் தொழில்துறையில் உள்ளசுமார் 5 லட்சம் பேர் பாதிக்கப்படுவார்கள் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் பலர் தொழில்களை இழந்துள்ளனர் எனவும், ஹோட்டல்களுக்கான வாடகைப் பணத்தைக் கூடச்செலுத்த முடியாமல், உரிமையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் எனவும் ஹோட்டல் உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

சில ஹோட்டல்கள் திறக்கப்பட்டிருந்தாலும் அங்கு கொத்து ரொட்டி, ரைஸ்போன்ற உணவுகள் தயாரிக்கப்படுவதில்லை எனவும், விறகைப் பயன்படுத்தியே கடும் சவால்களுக்கு மத்தியில் சமையல் இடம்பெறுகின்றது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, சுற்றுலாப் பயணிகளுக்கான ஹோட்டல்களை நடத்துபவர்கள், சமையல் எரிவாயு இன்மையால் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# எதிர்க்கட்சிகளின் போராட்டத்தால் அரசுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை

## இப்படிக் கூறுகின்றார் ஜகத் குமார எம்.பி.

கொழும்பில் எதிர்க்கட்சிகள் நடத்தும் போராட்டங்களால் அரசுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

- இவ்வாறு ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

கொரோனா நெருக்கடியுடன் தொடர்புடைய பல காரணிகளால் அந்நியச் செலாவணி கையிருப்பு வீழ்ச்சியடைந்தது. இதன் காரணமாக ஏற்பட்டுள்ள பொருள்களின் விலையேற்றத்தால் மக்கள் துயரமடைந்துள்ள போதிலும், நல்லாட்சி அரசுக்கு மீண்டும் அதிகாரத்தை வழங்க மக்கள் தயாராக இல்லை.

எதிர்க்கட்சியில் இருந்தபோது எமது குழுவினரும் இதுபோன்ற லட்சக்கணக்கான போராட்டங்களை நடத்தினர். இதனால் எதிர்க்கட்சிகள் பிழைப்பதே தவிர மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை.

தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு ஜனாதிபதியும் நிதி அமைச்சரும் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.



நாட்டில் பிணங்களை வைத்து பிழைப்பு நடத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் பலர் இருக்கின்றனர்.

அரசு வழங்கும் வரிச்சலுகையைப் பயன்படுத்தி அவர்கள் வருமானம் ஈட்டி வருகின்றனர். அரசிடம் இருந்து வரிச்சலுகை பெற்று, அதன் பலனை மக்களுக்கு வழங்காத இந்தத் தொழிலதிபர்கள், மக்களுக்குப் பூச்சாண்டி காட்ட முயல்கின்றனர் - என்றார்.

# பஸிலுக்கு எதிரான பிரேரணை; ஆதரிக்கும் நிலைப்பாட்டில் வாசு



நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு நாம் எதிர்ப்பு என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஊடகங்களிடம் அவர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பஸில் ராஜபக்ஷவுக்கு நாம் எதிர்ப்பு. அவர் வசமே ஆளும் கட்சி உள்ளது. எனவே, பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவது தொடர்பில் இன்னும் தீர்மானம் எடுக்க வில்லை.

அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிரணி கொண்டுவந்தால்கூட அதற்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் - என்றார்.

# சர்வதேச நாணய நிதியத்தை நாடினால் அரசிலிருந்து உடனே வெளியேறுவேன்

## அமைச்சர் வாசு எச்சரிக்கை



அரசு சர்வதேச நாணய நிதியத்தை நாடினால், நான் இந்த அரசில் அங்கம் வகிக்கமாட்டேன். இது உறுதி.

- இவ்வாறு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றால் மட்டுமே கடன் கிடைக்கும். அந்த நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளக்கூடியவை அல்ல.

அரச ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல், சுகாதாரம், கல்வித் துறைக்கான ஒதுக்கீடுகளைக் குறைத்தல், விலைத்தளம்பல் உள்ளிட்ட நிபந்தனைகள் பயங்கரமானவை.

அப்படியான நிபந்தனைகளை ஏற்கும் அரசியலின் அங்கம் வகிக்கமாட்டேன். பதவி துறப்புக் கடிதத்தை எழுதுவதற்கு ஒரு நிமிடம்கூட செல்லாது - என்றார்.

# பெருமெடுப்பில் மே தினக் கூட்டம் அரச பங்காளிக் கட்சிகள் தீர்மானம்

எதிர்வரும் மே தினக் கூட்டத்தைப் பெருமெடுப்பில் நடத்துவதற்கு 11 அரச பங்காளிக் கட்சிகள் தீர்மானித்துள்ளன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

அரசுக்கு எதிராக 'விமல் சூறாவளி' எனும் தொனிப்பொருளின் இம்மாதம் 27 ஆம் திகதி மாபெரும் கூட்டமொன்றை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், இதற்கு சில தரப்புகள் உடன்பட்டமையால் அந்தக் கூட்டம் கைவிடப்பட்டது.

எனினும், மே தினத்தைப் பெருமெடுப்பில் நடத்துவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி உடன்பட்டுள்ளது. இதற்கு ஏனைய கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

எனவே, மே தினக் கூட்டம் மற்றும் பேரணியை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு விரைவில் குழுவொன்றை அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# புதுமாத்தளன் பகுதியில் இரு மாணவிகள் மாயம்!

## பொலிஸில் பெற்றோர் முறைப்பாடு

முல்லைத்தீவு - புதுமாத்தளன் பகுதியில் நேற்று மாலைநேர வகுப்புக்காகச் சென்ற இரு மாணவிகளைக் காணவில்லை என்று அவர்களின் பெற்றோர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தரம் - 9 இல் கல்விபயிலும், 14 வயதுடைய இரு மாணவிகளே இவ்வாறு காணாமல்போயுள்ளனர்.

இது தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கூட்டமைப்பிற்கு கோட்டா வைத்த செக்?

அக்கரை / அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

கடந்த செவ்வாய்க்கிழமை, தலைநகர் கொழும்பில், அரசை எதிர்த்து, சஜித் பிரேமதாஸா தலைமையிலான மக்கள் சக்தி கட்சி முன்னெடுத்த மாபெரும் போராட்ட தினத்தன்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக, சத்தம் இல்லாமல் ஒரு கோல் அடித்துள்ளார். கூட்டமைப்பு தரப்பு ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் உண்மை அதுவே. ஆனால், அது மட்டுமே வரும் வாரங்களில் இரு தரப்பினரிடையேயான பேச்சுகளைத் தடம் புரள வைத்துவிடும் என்று கருது



வதற்கு இடமில்லை.

கோட்டா, கோல் அடித்த சம்பவம் இதுதான். அன்றைய தினம், எதிர்க்கட்சிகளின் போராட்டம் நடைபெற இருக்கிறது என்று தெரிந்து கொண்டே, ஜனாதிபதி, கூட்டமைப்புடனான பேச்சுக்கு நேரமும் காலமும் குறித்திருந்தார். அந்த சமயத்தில், போராட்டம் காரணமாக தலைநகரில் போக்குவரத்து ஸ்தம்பித்து விடும் என்று கூட்டமைப்பின் சார்பில் முன்வைக்கப் பட்ட கருத்திற்கு அரசு மாற்று மருந்து கூறியது.

அதாவது, கூட்டமைப்புத் தலைவர்கள், பாதுகாப்பாக, பேச்சுக்கு அழைத்து வரப்படுவார்கள் என்று அரச தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது. அன்றைய தினம் அரங்கேறிய ஒரு சில வன்முறை சம்பவங்களை வைத்துப் பார்க்கும்போது, கூட்டமைப்பினர் தலைநகர் தெருக்கள் வழியாக பேச்சுக்குப் பயணித்திருப்பார்களேயானால், அவர்கள் கதி அதோ கதியாகி இருக்கலாம். அதற்காக, அவர்கள் பயணிக்கும் வழியை சஜித் தரப்பினருக்குப் போட்டுக்கொடுக்கவும் கூட்டமைப்பினரிடையே நிரம்ப பேர் இருக்கிறார்கள் என்பது வெட்ட வெளிச்சம்.

ஆனால், கோட்டா அடித்த கோல் என்பது, கூட்டமைப்புடனான பேச்சை போராட்ட தினத்தன்று வைத்து விட்டு, பின்னர் போராட்டத்தைக் காரணம் காட்டி, அதனை 25 ஆம் திகதிக்கு மாற்றி வைத்ததுதான். இவ்வாறு செய்வதன் மூலம், எதிர்க்கட்சிகளின் போராட்டத்தில், கூட்டமைப்பு பங்கு பெறாமல் அவர் பார்த்துக் கொண்டார் எனலாம்.

ஆனால், அரச தரப்பு இத்தனை தூரம் யோசித்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. கூட்டமைப்பு மட்டுமல்ல, அரசை சாடும் தமிழர் தரப்பு அரசியல் தலைமைகள் எதுவுமே, சஜித் முன் வைத்த பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து கடந்த பல மாதங்களாக வாய் திறக்கவே இல்லை. எனவே, இந்த முறையும் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் போராட்டத்தில் பங்கு பெற்றிருக்கும் என்று கருத இடமில்லை.

என்னவென்றாலும், ஐக்கிய மக்கள் சக்தி, தனது தனிப்பட்ட பலத்தை அரசிற்கும் தங்களது கூட்டணி கட்சியினருக்கும் ஒரு போல தெரிவிப்பதே போராட்டத்தின் நோக்கம். அதற்கு அரசும், நாட்டின் பொருளாதார நிலைமையும் வழி செய்து கொடுத்தன. அவ்வளவுதான். அது அடுத்த காலத்தில் எப்போதோ நடைபெற இருக்கும் ஏதோ ஒரு தேர்தலுக்கான சஜித் பிரேமதாஸாவின் அறை கூவல் அவ்வளவுதான்.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பிற ராஜபக்ஷ – எதிரணி கட்சியினர் எவரையும் போராட்டத்தில் பங்கு பெறும்படி அழைப்பு விடுத்திருப்பார்களா, என்பது சந்தேகமே. அவ்வாறான அழைப்பு வந்திருந்தால் மட்டுமே கூட்டமைப்பு தலைமை, தனது மூளைக்கும் மனோநிலைக்கும் இடையேயான ஒரு போராட்டத்தை சந்திக்க வேண்டி இருந்திருக்கும்.

மாறாக, ஜனாதிபதி கோட்டாபய, கூட்டமைப்பை பேச்சுக்கு அழைத்தமை, அடுத்து நடைபெற்ற பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தோடு சம்பந்தபடுத்தி சிலர் பேசியதே பொருத்தமாக இருந்திருக்கும். பஸிலின் புதுடெல்லி விஜயமும், பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பும், சஜித் போராட்டத்தினைத் தொட்டு அடுத்த நாளில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்க விடயம்.

## தவறுகள், பொய்கள்

இந்தியாவிடம் பொருளுதவி கேட்டு, பஸில் புதுடெல்லிக்குப் படையெடுக்கும் முன்னரே, தமிழர் தரப்புடனான பேச்சுகளை மீளத் துவக்கி விட்டோம் என்ற செய்தி, இந்தியத் தலைமைக்குச் சென்றடைய வேண்டும் என்பதில் ஆளும் ராஜபக்ஷ தரப்பு முனைப்புடன் இருந்ததாகக் கருதலாம். இதுவே, இனப் பிரச்சினையில், இந்தியத் தரப்பிற்கு நாட்டம் இல்லை என்ற வாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விடும்.

இதில் கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் உள்ளன. ஒன்று, இலங்கை அரசுடனான பேச்சுகள் மூலம் மட்டுமே, இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்னெடுக்கப்படும் என்பதில், கூட்டமைப்பு முன்னெப் போதுக்கும் இல்லாத அதிக தீவிரமாக இருக்கிறது. அதற்கு வழி வகை செய்வது மட்டுமே இந்தியாவின் உரிமை, கடமை என்பதுதான், இலங்கை தமிழர் மத்தியில் உள்ள அனைத்து இந்தியா – ஆதரவு தமிழர் தரப்புகளின் நிலைபாடும் கூட.

இன்னும் சொல்லப்போனால், இந்தியா கைசாத்திட்ட ராஜீவ் – ஜெயவர்த்தன ஒப்பந்தம் கூட தமிழர் தரப்பினரை கலந்து ஆலோசித்து எடுத்த முடிவு அல்ல, என்று விடுதலைப் புலிகள் இயக்கமும், மிதவாத தமிழ் அரசியல் – சமூக தலைமைகளும் குற்றம் சாட்டி வந்திருக்கின்றன. அது உண்மையா என்பது அலசி ஆராயப்பட வேண்டிய விடயம். அவ்வாறு அல



சினால், அவர்களது குற்றச்சாட்டுகளில் இருக்கும் தவறுகள் அல்லது பொய்கள் வெளிப்படும். அது வேறு விடயம்.

தற்போதைய சூழ்நிலையில், கூட்டமைப்பும் சரி, பிற தமிழர் தரப்புகளும் சரி, இந்த அரச தலைமையுடனோ, அல்லது ஆட்சியில் இருக்கும் எந்த அரசியல் தலைமையுடனோ, பேச்சுகள் நடத்துவது மட்டுமே, இனப் பிரச்சினைக்கான முடிவை பெற்று தர முடியும். சர்வதேசத்தை அண்டிப் பிழைத்தால், நூறு ஆண்டுகளுக்கு பின்னர், ராஜபக்ஷக்களுக்கு எதிராகவும், இலங்கை இராணுவ தலைமைகளுக்கு எதிராகவும் தண்டனை பெற்று தரும் என்று வேண்டுமென்றால் கருதலாம். அதுவும் சந்தேகமே.

ஆனால், தமிழர்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் அரசியல் யாப்பு திருத்தங்கள், மாற்றங்கள் குறித்து எந்த பயனும் ஏற்பட போவதில்லை. அதற்கு, தமிழர் தரப்புகள், நாட்டின் அரச தலைமை மற்றும் சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேச்சு மூலமே தீர்வு காண முடியும். அதிலும் குறிப்பாக, கடந்த ரணில் தலைமையிலான அரசிடமிருந்து எப்போது கூட்டமைப்பால் அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ள முடியவில்லையோ, அப்போதே அடுத்து பதவியில் வந்துள்ள ராஜபக்ஷக்களுடன் பேச்சை முன்னெடுப்பது தவிர்க்க முடியாத விடயமாகி விட்டது.

## அவலை நினைத்துக் கொண்டு...

அந்த வகையில், அரசு, அனைத்து தமிழர் தரப்பினருடனும் பேச்சு நடத்த வேண்டும் என்று ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கூறுவது வரவேற்க கூடிய விடயம். ஆனால், இது குறித்த அவரது உள்நோக்கம் சந்தேகத்திற்கும், ஏன் நகைப்பிற்கும் கூட இடமளிப்பதாகும்.

பதின்மூன்றாவது திருத்தத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்க



வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு, அனைத்து தமிழர் கட்சி தலைமைகளும் ஒரு சேர கடிதம் அனுப்ப, செல்வம் தான் முயற்சி செய்தார். அந்த விடயம் குறித்து இந்தியா, ஜனாதிபதி கோட்டாவுக்கு அமைதியான அழுத்தம் கொடுத்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது, பதின்மூன்றாம் திருத்தம் குறித்து அரசு, கூட்டமைப்புடன் பேச்சு நடத்த விரும்புவதாக கருதவும் இடமுள்ளது. அல்லது, பிற பிரச்சினைகளுடன் அதனையும் சேர்ந்து கலந்துரையாடலாம். அவ்வாறு இல்லையென்றால், அந்த ஒரு பிரச்சினையை கூட்டமைப்புத் தலைமை, ஜனாதிபதியுடனான பேச்சுகளில் முன் வைக்கலாம். அவ்வாறு, கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் செய்யவில்லை என்றால், கூட்டமைப்பு சார்பாக பேச்சுகளில் கலந்துகொள்ளும் பட்டியலில் இடம் பெற்றுள்ள செல்வம், அந்த பிரச்சினையைத் தானாகவே முன் வைத்து, அரசின் பதிலை கோரிப் பெறலாம்.

அரசின் பதில் முரண்பாடாக இருந்தால், அப்போது கூட அடுத்த கட்ட பேச்சுகளை ரெலோ புறக்கணிக்கலாம். அத்தகைய பேச்சுகளை முறியடிக்க வேண்டுமென்றால், இந்த ஒரு காரணத்தை மட்டுமே வைத்து, கூட்டமைப்பிற்குள் குழப்பத்தை எற்படுத்தலாம்.

இனப்போருக்கு பிந்தைய காலகட்டத்தில், இவ்வாறான மஹிந்த ராஜபக்ஷ அரசுடனான கூட்டமைப்பு பேச்சுகளை முறித்துக் கொண்டமைக்கு பின்னால் தமிழ் சமூக அமைப்புகள் இருந்தன. அதற்கு அன்றைய மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமை வகித்தார். அவருடன் பின்னிருந்து செயலாற்றிய சில தலைவர்கள் இன்றளவும் தமிழர் அரசியலில் குப்பை கொட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

தற்போது, அரசுடனான பேச்சுகள் துவங்கும் முன்னரே அதில் பங்கு பெற மாட்டேன் என்று செல்வம் அடைக்கலநாதன் சூளுரைப்பது, அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பதற்குச் சமம். பச்சையாகச் சொல்ல வேண்டுமென்றால், எப்போதாவது நடைபெறவிருக்கும் வட மாகாண தேர்தலில், கூட்டமைப்புக்கு தலைமைத்துவம் வகிக்கும் தமிழரசு கட்சியின் முதல்வர் வேட்பாளரை எதிர்த்து ஒரு பொது வேட்பாளரை களமிறக்கும் சூட்சுமத்தை இதன் ஒரு



பகுதியாக கருத இடமிருக்கிறது. அதுவே அந்த திட்டத்தின் முக்கிய பகுதியும் கூட என்றும் கருத இடமிருக்கிறது.

(10ஆம் பக்கம் பார்க்க)

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்
செவ்வழி நயனம்

# ‘அறம் செய்ய விரும்பு’



பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எக்காலத்திலும், எவ்வயதினரும் பின்பற்றி ஒழுகக்கூடிய நல்வாழ்க்கைத் தத்துவங்களையும் ஒழுக்க நெறிகளையும் மிக மிக எளிய வடிவில் ஒரு வரிக் கவிதையாக வடித்து, எளிதில் பசுமரத்து ஆணிபோல் மனதில் நிலைத்து நிற்கும்படி விலைமதிப்பற்ற ஆத்திசூடி எனும் நூலாக இவ்வுலகிற்கு தந்தருளியவர் ஔவைப்பிராட்டி ஆவார். அதில் முதல் வரியே ’ அறம் செய்ய விரும்பு’ என்பதாகும்.

இதில் விரும்பு என்ற சொல்லில் ஆழமான பொருள் புதைந்துள்ளதென நான் கருதுகிறேன். ஏனென்றால் மனவிருப்புடன் நாம் எந்தக் காரியத்தை செய்யமுற்பட்டாலும் நம்மை மறந்து, அதனை இரசித்து, இலயித்து ஒருவித ஆத்ம மகிழ்வுடன் தொடர்ந்து செய்து கொண்டிருப்போம். இன்னும் மிகுந்த ஆர்வத்துடன், பலவித தேடல்களுடன், பல பரிமாணங்களில், பிடித்த செயலை தொடர்ந்து செய்ய முற்படுவோம். அதே போல்தான் நாம் செய்யும் அறத்தையும் விருப்புடன் செய்ய வேண்டுமென ஔவைப்பிராட்டியார் அன்றே கூறினாரோ!

தானம் மட்டுமே அறம் ஆகிவிடாது. இதனை உலகப் பொது மறையாம் திருக்குறளில் திருவள்ளுவர் அவர்கள் அறன் வலியுறுத்தல் அதிகாரம் நான்கிலே –

**‘அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்’** – என்கிறார்.

இதன் பொருளானது பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கும் அறவழிக்குப் பொருந்தாதவையாகும். எனவே, இந்த நான்கு தீய குணங்களையும் மனதிலிருந்து நீக்கி சிறந்த நெறிமுறையோடு வாழ்வது அறமாகும்.

எமது முன்னோர்களின் மதிநுட்பத்தை எண்ணிப் பார்க்கும் போது உண்மையிலேயே மெய்சிலிர்த்து நிற்கின்றேன். அறம் செய்வதனால் ஏற்படும் பயனை மிகத் தெளிவாக எம் சிந்தையில் இருத்திக் கொள்ளும் வகையில் திருவள்ளுவர் அவர்கள் மிகவும் இலகுவாக இரு அடிகளில் கூறியுள்ளார். அதாவது –

**‘அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை’** என்கிறார்.

இதன் பொருளை திரு சாலமன் பாப்பையா அவர்கள் அறத்தைச் செய்தால் வரும் பயன் இது என்று நூல்களைக் கொண்டு மெய்ப்பிக்க வேண்டியதில்லை. பல்லக்கைத் தூக்கிச் செல்பவனையும் அதில் பயணிப்பவனையும் கண்ட அளவில் பயனை அறியலாம் என்கிறார். இதைவிட சுலபமாக யாரால் விளக்கிட முடியும்?

எனவே, விருப்புடன் அறம் செய்வோம்! மீண்டும் மீண்டும் செய்வோம். நமது மதிநுட்பம் மிக்க சான்றோர் கூறினார்கள் என்பதற்காக கடமைக்கு செய்யாது மனக்களிப்புடன் செய்வோம். ஆதலால் இன்றே அறம் செய்ய விரும்புவீராக!

- செல்வி கார்த்திகா இரத்தினம் -
(அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.)

# கோளறு பதிகம்

பாடல் - 06
ஓவியமும் விளக்கமும் : பத்மவாசன்

**வாள்வரிய தளதாடை வரி கோவணத்தர்
மடவாள் தனோடு உடனாய்
நாள்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே**

பொழிப்பு :-

தாருகாவனத்து முனிவர்கள் அறியாமையால், அபிசாரஹோமம் வளர்த்து, அகங்காரத்தால் உண்டுபண்ணி, ஏவிவிட்ட புலியை மெல்லப் பிடித்து முக்தி கொடுத்து, நெருப்பில் இருந்தும் பிறந்ததனால் ஒளி மிகுந்த அதன் வரிகள் கொண்ட தோலை ஆடையாக அணிந்தவரும், பசுஞ் சாணத்தால் ஆன விபூதியை வரிகளாய் அணிந்தவருமான, முழுமுதற்கடவுளான முக்கண்ணனார், பார்வதிதேவியருடனும் கூடியிருந்து, அன்றைய பொழுதில் மலர்ந்த மலர்களான ஊமத்தை, எருக்க மலருடன், வன்னி இலை, கொன்றை மலர்களோடு கங்கை நதியையும் அமர்த்திக்கொண்டு என் உள்ளமெனும் ஆலயத்தில் அமர்ந்திருப்பதனால், சீறிப் பாயும் சிங்கம், கொடிய புலி, கொல்லும் யானை, குத்திக்கிழிக்கும் காட்டுப்பன்றி, கொடிய விஷம் நிறைந்த நாகம், நீண்ட நகங்களால் கண்களைக் குத்தும் கரடி, குரங்குகளையே அடித்து உண்ணும் மனிதக் குரங்கு, (கூடவே சாதாரண குரங்குகளும்) போன்ற எல்லாமே சாந்தமே உருவாகி நல்லன, நல்லன, மிக மிக நல்லனவே பரமசிவனடியார்களுக்குச் செய்யும்.



(இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீட்டிலிருந்து)



# நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை

தானதன தான தன்ன தானதன தான தன்ன
தானதன தான தன்ன - தனதான

எழுகுதிரை யழகுதர தழிவிலருள் பொழியவரு
எழிலரியின் மனமகிழு - மருகோனே
எழுமெனது திரிமலமு மகலவுன மருளதனை
எளிதிலடை வரமதனை - தரவேணும்
பழுதரிய குருவதென பெரியதுறை மருவியொரு
பரியதினி லிவருமிறை - தருபாலா
பகலிரவு எனவுனது பதமதனை பரவிவரு
பலனினொடு உனையறியு - மறிவீயாய்
அழுதுனடி கதியதென தொழுதுவரு மடியரடை
அகமதுறு துயரகல - அருளாயோ?
அவரடையு துயரமது விடைபெறவு னருளதனை
அகமகிழ அருளிவரு - குமரேசா
நழுவுமயி லதனிலுனை தழுவுமிரு அரிவையொடு
நவையறுமு னுருபருகு - வரந்தாராய்
நலமதனை யருளவென நிலவுலகி லுலவுபதி
நவிலரிநல் லையினிலுறை - பெருமானே!

– கவிஞர் இராசையா குகதாசன் –

# புஜங்காசனம்

(இதன் உச்சநிலையானது பாம்பு போல் தோற்றமளிப்பதனால் சர்ப்பாசனம் எனவும் அழைப்பர்)

**செய்முறை -**

படி 1. குப்புறப்படுத்து கைகளை தலைக்கு மேலாக நீட்டி உள்ளங் கைகள் தரையின் மீது பொருத்தியவாறு இருக்கட்டும். முகவாயை தரையின் மீது வைக்கவும். கால்களை இணைத்து உள்ளங்கால்கள் மேல் நோக்கியவாறு இருக்குமாறு படுக்கவும்.

படி 2. இரு முழங்கைகளையும் மடித்து உள்ளங்கைகளை நெஞ்சுப்பகுதியின் இரு புறமும் ஊன்றவும்.

படி 3. முழங்கைகளை சிறிது தூக்கி மெதுவாக மூச்சை இழுத்தவாறு தலையை நிமிர்த்தி பின் மார்பையும் உயர்த்தவும். உடலின் எடை இடுப்பின் மீது இருக்க வேண்டும். உச்சநிலையில் ஆழமாக 1 நிமிடம் வரை சுவாசிக்கவும்.

படி 4. பின்னர் மார்பையும் தலையையும் மூச்சை வெளிவிட்டவாறு கொண்டு வந்து முகவாயை தரையில் பதிக்கவும். கைகளை தலைக்கு மேல் நீட்டியபடி ஆரம்ப நிலைக்கு வரவும்.

**குறிப்பு:-** ஆரம்ப நிலையில் முழங்கைகள் தரையில் படிந்திருக்கத்தக்கதாக பிரிமென் தகட்டு பகுதிக்கு மேற்பகுதியையும் பின்னர் முழுநிலையில் தொப்பூழ் பகுதிக்கு மேல் தூக்க வேண்டும். இந்நிலையில் முழங்கைகளை சிறிது தூக்கலாம்.




**பலன்கள்:-** மேற்புற முதுகெலும்புகள் நன்றாக வளைத்து கொடுக்கின்றன. 33 சோடி முதுகுத்தண்டு விரிவடைந்து உரம்பெறும். மலச்சிக்கல், கசம், அஸ்மா, முதுகுவலி, கழுத்து வலி, மார்புவலி, இருதய பலவீனம் என்பன நீங்கும். இரத்தம் சுத்தமாகும். குரல் தெளிவடையும். முதுகெலும்பு பின்னோக்கி வளைத்து இழுக்கப்படுவதனால் முள்ளந்தண்டு மற்றும் நரம்பு மண்டலங்களும் வலுவடைவதுடன் வயது வந்த பின் கூன் விழுவது தடுக்கப்படும். நுரையீரல் அழற்சி நீங்கும். தைரொயிட், பராதைரொயிட் சுரப்பிகளின் இயக்கங்கள் தூண்டப்பட்டு அவை சம்பந்தமான நோய்கள் குணமாகும். ஜீரணக் கோளாறுகள் நீங்கும். குடலின் இயக்கம் மற்றும் வயிற்றிலுள்ள சமிபாட்டு உறுப்புக்களின் இயக்கங்கள் அதிகரிக்கும். வயிற்றில் உள்ள நாளமில்லாச் சுரப்பிகளின் தொழிற்பாடுகள் அதிகரிக்கும்.

- ஸ்ரீ. நதிபரன் - (யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)

## பிச்சை எடுக்கும் அரசுக்க ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்றைய இந்த நிலைக்குக் காரணத்தைப் பார்த்தால் சரியான பொருளாதாரக் கொள்கை நாட்டில் இல்லை .

இதற்கு முன்னர் இவர்களுடைய திவிநெகும மோசடி தொடங்கி கடந்தகால ஆட்சியாளர்களின் மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் ஆரம்பித்து கடந்தகால மோசடிகளால்தான் இதுவரை சரியான பொருளாதாரக் கொள்கைகள் வகுக்கப்படாமல் இருக்கின்றது.

மத்திய வங்கியின் ஆளுநராக இருக்கின்ற அஜித் நிவாட் கப்ராலின் கடந்த காலங்கள் கூட மிகவும் மோசமாக இருக்கின்ற பக்கத்தில் அவரை மீண்டும் ஆளுநராகப் போட்டிருக்கின்றார்கள்.

வாரந்தோறும் பணங்களை அச்சடிக்கின்ற நிலைமையைப் பார்க்கின்றோம். இவையெல்லாம் நாட்டின் சரியான பொருளாதாரக் கொள்கைகளாக இல்லை. இலங்கை முற்றுமுழுதான கடனுக்குள் மூழ்கிப் போய்விட்டது .

2009இல் போர் முடிவடைந்து இன்று 13 வருடங்கள் ஆகியும் பொருளாதார ஸ்திரத்தன்மை இல்லாத நிலையை இந்த 13 வருட கால ஆட்சியாளர்களும் பார்க்க வேண்டும்.

காரணம் இன்றி பெருமளவு பணம் பாதுகாப்புச் செலவுகளுக்காக ஒதுக்கப்படுகின்றது. மிகப்பெரிய ஒரு தாக்குதல் நடத்தப்போவதாக அல்லது ஒரு நாட்டை ஆக்கிரமிக்கப் போவதாக நினைத்துத்தான் குறித்த தொகை ஒதுக்கப்படுவதாகப் பார்க்கவேண்டியுள்ளது.

இன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் அனைவரும் வசதியாக வாழ்கின்றனர். அவர்களுக்கு எரிபொருள் தட்டுப்பாடு, உணவுத் தட்டுப்பாடு எதுவுமில்லை.

இன்று இலங்கையில் என்ன வளம் இல்லை? எல்லா வளமும் உண்டு . ஆனால், நாடு ஏன் இவ்வாறு ஒரு அதலபாதாளப் பொருளாதார வீழ்ச்சிக்குப் போனது என்று காரணத்தைத் தேடினால் இவற்றுக்கு ஆட்சியாளர்களே முழுப் பொறுப்புக்கூற வேண்டும் .

இன்று இந்த நாட்டின் ஜனாதிபதி குறித்த பொறுப்பில் இருந்து விலகுவது போல் நான் ஒன்றும் செய்ய முடியாது எனக் கூறுகின்றார். அப்படிக் கூறுபவராக இருந்தால் நீங்கள் ஏன் ஜனாதிபதியாக இருக்கின்றீர்கள்?

நாங்கள் இன விடுதலைக்காக - சுயநிர்ணயத்துக்காகப் போராடியபோது எல்லா நாடுகளின் உதவியுடனும் நாம் அழிக்கப்பட்டோம். தமிழீழ விடுதலைப் புலிகளுடைய அந்தக் கட்டுப்பாட்டின் கீழ் நாம் வாழ்ந்த வாழ்வை சுய பொருளாதார நிலையில் தன்னிறைவு பொருளாதாரத்தை நாம் அடைந்து இருந்தோம் .

இன்று இலங்கை அரசு, போர் நடக்கும் ரஷ்யாவிடம் கூட பிச்சை எடுக்கின்ற நிலைமையில் காணப்படுகின்றது .

அன்று ஒவ்வொரு மக்களும் கொடூரமாகக் கொல்லப்பட்டபோது நாங்கள் விட்ட கண்ணீரும், அவர்கள் விட்ட ஏக்கமும் இன்று இலங்கையை ஒரு நட்டாற்றில் கொண்டு வந்துவிட்டு இருக்கின்றது. இந்த அழிவுக்கு உடந்தையாக இருந்த அத்தனைபேரும் இதற்குப் பொறுப்பாளிகள் ஆகவேண்டும் .

இன்று இலங்கையினுடைய கடனை அடைப்பதற்கு இன்றைய ஆட்சியாளர்களின் சொத்துக்களை விற்றாலே போதும்.

வடக்கு, கிழக்கு மக்களுடைய இனப் பிரச்சினைகளை இவர்கள் தீர்ப்பார்களாக இருந்தால் புலம்பெயர் வாழ் தமிழ் மக்களே இவர்களுடைய கடனை ஈடுசெய்யக் கூடியதாக இருக்கும். ஒட்டுமொத்த தமிழர்களும் நினைத்தால் இந்த இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கான கடனைத் தீர்க்க கூடிய வழி உள்ளவர்களாக இருக்கின்றார்கள்.

ஆனால், எங்களை அழித்துவிட்டு எங்களுக்கான அரசியல் உரிமை மறுக்கப்பட்டு நாம் அடிமையாக இருக்கின்றோம். இவ்வாறான நிலையில் அன்று கண்ணீருடன் போராட்டங்களை முன்னெடுக்கின்ற நிலையை நாம் பார்க்கின்றோம்.

சாதாரண பொதுமக்கள் தெருவில் நின்று டீசல் பெற்றோலுக்கு வரிசையில் நிற்பது, உணவுப் பொருள்களுக்கு கடைகடையாக ஏறி இறங்குவதும் எல்லாமே மக்களை மிக மோசமான நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றது.

ஐ.நாவில் தாங்கள் நல்லவர்கள் எனக் காட்டிக்கொண்டு இருக்கின்ற இந்த ஆட்சியாளர்கள் சர்வதேசத்திடம் பிச்சை எடுக்கின்றனர். இந்தப் பிச்சைக்காரர்களுக்கு ஆட்சி அதிகாரம் எதற்கு?

நாம் இந்தக் கொடிய போர்ச்சூழலில் வாழப் பழகிக்கொண்டவர்கள். ஆனால், சிங்கள மக்கள் தாங்கிக்கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர் .

ஒரு சில வாரங்களுக்குள்ளேயே இந்தச் சிங்கள மக்கள் தெருவுக்கு வந்திருக்கின்றார்கள் என்றால் நாங்கள் பல வருடங்களாக இந்தப் பொருளாதாரத் தடைகளுக்கு என்னவெல்லாம் கஷ்டப்பட்டு இருப்போம்.

எனவே, இந்த அரசு விதைத்ததை அறுவடை செய்கின்றது. ஏழை சிந்திய கண்ணீர் கூரிய வாளை ஒக்கும் என்று சொல்வார்கள். அதே வார்த்தையை இந்த இடத்தில் நினைவுகூருகின்றோம்.

இன்னும் ஒரு மோசமான நிலையை இவர்கள் தாக்குப் பிடிக்க முடியாமல் இந்த ஆட்சி அதிகாரத்தை விட்டு ஒதுங்கும் நிலை கடவுளால் வழங்கப்படும் - என்றார்.

## காலி, மாத்தறையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இரு மாவட்டங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா. சாணக்கியன் ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் எதிர்க்கட்சிக் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள், முற்போக்குக் கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் மற்றும் மூவின மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தத்தமது கையெழுத்துக்களைப் பதிவிட்டனர்.

## கோட்டாவின் கோட்டையை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்ன பயனை அவர்கள் அடைந்தார்கள்?

எதிரணியினர், ஜனாதிபதியின் செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் செய்வதால் எமது ஆட்சியைக் கவிழ்க்கவே முடியாது. ஏனெனில், 69 இலட்சம் மக்களின் ஆணையுடனேயே இந்த ஆட்சி அமைக்கப்பட்டது. இதை எதிரணியினர் கவனத்தில்கொள்ள வேண்டும்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு எமது அரசு காரணம் அல்ல. தற்போதைய எதிரணியினர்தான், கடந்த ஆட்சியில் நல்லாட்சி என்ற பெயரில் நாட்டைச் சீரழித்தனர். அதன் விளைவுகளை இன்று அனைவரும் அனுபவிக்கின்றோம். இதை எமக்கு ஆணை வழங்கிய 69 லட்சம் மக்களும் புரிந்து கொள்வார்கள்.

தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு விரைவில் தீர்வு காணப்படும். ஜனாதிபதி இதில் உறுதியாகவுள்ளார் - என்றார்.

## இன்று யாழ்ப்பாணம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணத்தின் நிலைவரம் தொடர்பில் ஆராயும் நோக்கில் அவரின் இந்தப் பயணம் இடம்பெறுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். வரும் அமைச்சர், மாவட்ட செயலகத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும் கலந்துரையாடலிலும் பங்கேற்பார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மத்திய வங்கி ஆளுநர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பலமான ஒரு சக்தியாக அவர் செயற்படுவார்.

சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழு, அதிகாரிகள் பற்றி கலந்துரையாடவில்லை. மத்திய வங்கியின் ஆளுநர் கப்ராலும் கலந்துகொண்ட அந்தக் கூட்டத்தில், நிதிப் பிரச்சினைகள் மட்டுமே கலந்துரையாடப்பட்டன.

இது போன்ற பொய்யான மற்றும் போலியான அறிக்கைகளால் மனம் தளராமல், நமது நாட்டின் ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சிக்காக அவரின் அனைத்து முக்கிய பணிகளையும் தொடர்ந்து முன்னெடுக்குமாறு, நான் மத்திய வங்கியின் ஆளுநர் கப்ராலுக்குத் தனிப்பட்ட முறையில் அறிவித்திருக்கின்றேன் - என்றார்.

## அடம்பனில் யானை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த 13ஆம் திகதி அதிகாலை ஒரு மணியளவில் வீட்டுக்கு முன் உள்ள வீதியில் சத்தம் கேட்டது. அதனால் வெளியே வந்த குடும்பத் தலைவர் டோ ச் லைட் அடித்து அவதானித்தார். இதன்போது அவரது மனைவியும் வீட்டு முற்றத்துக்கு வந்தார்.

அப்போது யானை ஒன்று அவர்களது காணிக்குள் நுழைந்து இருவரையும் தாக்க வந்தது. அதனால் கணவர் ஓடி வீட்டுக்குள் நுழைந்தபோதும் மனைவி ஒடி மறைவாக இருந்தார்.

இதன்போது வீட்டுக்கு வெளியே மறைவில் இருந்த பெண்ணை யானை தாக்கியது.

யானை தாக்கிப் படுகாயமடைந்த பெண், மன்னார் மருத்துவனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டார்.

எனினும், நான்கு நாள்களின் பின் நேற்று முற்பகல் 9 மணியளவில் சிகிச்சை பயனின்றி குடும்பப் பெண் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணையை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு அறிக்கையிட்டார்.









# ஒரு லட்சம் ரூபா தானா எனது பிள்ளையின் பெறுமதி?

## காணாமல் போனோரின் உறவுகள் கேள்வி



ஒரு லட்சம் ரூபா தானா எனது பிள்ளையின் பெறுமதி? அவ்வாறு எனது பிள்ளையை பெறுமதி தீர்க்க இவருக்கு என்ன அருகதை இருக்கின்றது? என கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் சங்கத்தின் தலைவி இராமநாதன் கோகிலவாணி கேள்வி எழுப்பியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவுகள் சங்க அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்று எங்களுடைய போராட்டம் 5 வருடங்களையும் கடந்து வீதியில் இறங்கி போராடிக்கொண்டிருக்கும் இந்த வேளையில், ஒரு லட்சம் ரூபா வாழ்வாதாரமும், மரணச்சான்றிதழும் மரணச்சான்றிதழை பெற்றுக்கொள்ள விரும்பாதவர்களுக்கு காணாமல் போனோர் சான்றிதழ் வழங்குவோம் எனவும் நீதி அமைச்சர் கூறியிருக்கின்றார்.

எங்களது உறவுகள் கிடைக்கும்வரை போராடிவரும் எமது போராட்டத்தை மழுங்கடிக்கவே இந்தத் தீர்வை அவர்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள். பொருள்களின் விலைகள் அதிகரித்து உணவின்றி மக்கள் உயிரிழக்கும் வேளையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு ஒரு லட்சம் ரூபா வாழ்வாதாரம் வழங்க முன்வந்திருக்கின்றார்.

இந்தவேளையில் அவர் இவ்வாறான வாழ்வாதாரத்தை கொடுக்க முன்வந்திருக்கின்றமை தொடர்பில் எமக்கு விளங்கவில்லை. எமது போராட்டத்தை மழுங்கடிக்கவே இவ்வாறு உதவ முன்வந்துள்ளனர் என நாங்கள் விளங்கிக்கொண்டிருக்கின்றோம். எமது உறவுகள் இவர் களது ஒரு லட்சம் ரூபாவை வாங்குவதற்கும், மரணச் சான்றிதழை பெற்றுக்கொள்ளவும் தயாராக இல்லை.

இவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகளை மீட்டுத்தர வேண்டும். இவர்களால் தரமுடியாது என்றால் சர்வதேசம் எமது உறவுகளை கண்டுபிடித்து தர வேண்டும்.

எங்களுடைய உறவுகளைத்தேடி 5 வருடங்கள் முடிவடைந்துள்ள காலத்தில் இன்னும் போராடிக்கொண்டுதான் இருக்கின்றோம். எங்களுடைய உறவுகளைத் தேடி மழை, வெயில், பனி என்று பாராது எத்தனையோ தாய்மார் இறந்தும் எமது போராட்டத்தை நாங்கள் கைவிடவில்லை.

இதுவரை காலமும் எமது நோய்களுக்காக சிகிச்சைக்கு பயன்படுத்தப்பட்ட பெறுமதிகூட இந்த ஒரு லட்சத்தை ஈடு செய்யாது. இந்த நிலையில் இவர்கள் ஏன் இந்த ஒரு லட்சத்தை தர நிக்கின்றார்கள் என்று தெரியவில்லை. எங்களுக்கு எங்களுடைய உறவுகள்தான் வேண்டும். இவர்களிடம் பொருள்களை கொடுக்கவில்லை. இவர்களிடம் எமது பிள்ளைகளான உயிர்களையே ஒப்படைத்தோம்.

இப்பொழுது இருக்கின்ற அரசாங்கத்திடம்தான் எமது உறவுகளை ஒப்படைத்தோம். அவர்கள் இன்று வரைக்கும் எவ்விதமான முடிவையும் தரவில்லை. எமக்கு எமது உறவுகளைத்தான் மீட்டுத்தரவேண்டுமேயன்றி இழப்பீடுகளோ, மரண்சான்றிதழ்களோ தேவையில்லை.

எமது உறவுகளை கையளித்து 12 ஆண்டுகள் முடிவடைகின்றன. 2009 ஆம் ஆண்டு எமது பிள்ளைகளை ஓமந்தையிலும், வட்டுவாகலிலும் அவர்களது கரங்களில் உயிருடன்தான் ஒப்படைத்தோம். 10 மாதம் வயிற்றில் சுமந்து பெற்றெடுத்து, அவரை படிப்பித்து எம்மை பார்க்க வேண்டும் என்ற இந்த நேரத்தில் இன்று பிள்ளையை இழந்து நிக்கின்றேன்.

ஒருலட்சம்தானா எனது பிள்ளையின் பெறுமதி? அவ்வாறு எனது பிள்ளையை பெறுமதி தீர்க்க இவருக்கு என்ன அருகதை இருக்கின்றது எனவும் அவர் இதன் போது தெரிவித்தார்.

## வழமைக்கு திரும்புகின்றன எரிவாயுக்கள் விநியோகம்!

எரிவாயு கப்பல்களுக்கான பணத்தை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நேற்று(வியாழக்கிழமை) முதல் எரிவாயு இறக்குதல் மற்றும் அதனை விநியோகிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

லாப்ஸ் மற்றும் லிட்ரோ எரிவாயு நிறுவனங்கள் டொலர்கள் பற்றாக்குறையால் எரிவாயு விநியோகத்தை நிறுத்தின என நேற்று அறிவித்திருந்தன.

தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக நாடளாவிய ரீதியில் எரிவாயுவிற்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## குளமொன்றில் மிதந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!

புத்தளம் மஹகும்புக்கடவல ஹொரகஹயாய பகுதியிலுள்ள குளமொன்றில் மிதந்த நிலையில் நபர் ஒருவரின் சடலமொன்று புதன்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளது.

படபொல, கிதுல்கஹகல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மஹகும்புக்கடவல ஹொரகஹயாய பகுதியிலுள்ள குளத்தில் சடலம் ஒன்று கிடப்பதாக மஹகும்புக்கடவல பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்கு வருகை தந்த ஆனமடுவ பதில் நீதிவான், சம்பவ இடத்தில் நீதிவான் மரண விசாரணையை முன்னெடுத்தமையுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில் உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மஹகும்புக்கடவல பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கூட்டமைப்பிற்கு கோட்டா .......

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

**வாரிசு பிரகடனம்**

இத்தகைய கருத்தில் உண்மை இருக்குமேயானால், அதுவே, தற்போது உருவாகி உள்ளதாக கருதப்படும், தமிழரசு அல்லாத பிற முந்தைய – இன்றைய கூட்டமைப்பின் பிற அங்கத்துவ கட்சிகளின் ஒற்றுமைக்கு ஊறு ஏற்படும் என்பதில் இரண்டு வித கருத்துக்கு இடமில்லை. இப்போதே, கூட்டமைப்பினுள்ளேயே, தன்னிச்சைப்படி, செல்வம் தனக்கு என்று கூட்டமைப்பு துணைத் தலைவர் என்ற பதவியை உருவாக்கி, பிரகடனப்படுத்தி வருகிறார். அது போன்றே, ரெலோவின் தற்போதைய பேச்சாளரான குருசாமி சுரேந்திரன் என்பவரை, கூட்டமைப்பின் துணை பேச்சாளராகவும் பிரகடனப்படுத்தி உள்ளார்.

இது, அந்த இரு பதவிகளையும் தற்போது வகிக்கும் இரா.சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரை மட்டம் தட்டுவது மட்டுமல்ல. தற்போது காலியாக இல்லாத அந்த இரண்டு பதவிகளுக்கும் தங்களை வாரிசாகப் பிரகடனப்படுத்தி கொள்வதும் கூட இந்தத் திட்டத்தில் அடங்கும் என்றே எண்ண தோன்றுகிறது.

இதில் பிரச்சினை என்னவென்றால், கூட்டமைப்பிற்கு என்று எந்தவொரு சட்டதிட்டமும் இல்லை. பதவிகளை தேர்தல் மூலம் நிரப்புவதற்கும் அங்கு இடமில்லை. ஒருமித்த கருத்து மூலம் இந்த இரண்டு பதவிகளும் தோற்றுவிக்கப்பட்டு, இந்த இரு தலைவர்களும் அந்தந்தப் பதவிகளில் அமர்த்தப்பட்டார்கள். அவ்வளவுதான்.

அதாவது, செல்வம் அண்ட கோ, இல்லாத ஊருக்கு வழி தேடுகிறார்கள். அதில், அரசுடனான பேச்சுகளில் பங்குபெறுவது குறித்த ரெலோவின் முடிவும் ஒரு பகுதியே. என்ன, தற்போது. பேச்சுகளில் கலந்து கொள்வது குறித்து ரெலோவில் தீவிர செயல்பாட்டில் இல்லாத அரசியல் குழு முடிவு செய்யும் என்ற அறிவிப்பு வெளியாகி உள்ளது. இதுவும், இல்லாத கூத்தில், போடாத வேடத்திற்கான முஸ்தீபே.

நரேந்திர மோடிக்கான கடித விடயத்தில், பிள்ளையார் பிடிக்கிறார் என்று கருதப்பட்ட செல்வம், பிள்ளையார் தான் பிடிக்க விரும்பினாரா, என்ற கேள்வியே தற்போது எழுந்துள்ளது. இது எதிர்பார்க்கப்பட்ட விடயமல்ல. மாறாக, எதிர்மறையான விடயம். இதுவே கூட, தமிழர் அரசியலில் இயல்பான விடயமும்தான்!

## கொள்ளையர்களால் இரண்டு பேர் கொலை!

நாட்டில் இரண்டு இடங்களில் கொள்ளைச் சம்பவங்களுக்காக இருவர் கொலை செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாலபே பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தலஹேன பகுதியில் உள்ள வீடொன்றுக்கு புதன் காலை வந்த இருவர் வீட்டினுள் இருந்த பெண்ணை கட்டி வைத்து கணவனை கொலை செய்து நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர் என மாலபே பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

80 வயதுடையவர் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை மாலபே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, புதன்கிழமை காலை சீதுவை, முகலங்கமுவ பிரதேசத்தில் வீடொன்றில் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டு பொருள்கள் கொள்ளையிடப்பட்டமை தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய வயோதிப பெண் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை சீதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ரயிலில் இருந்து விழுந்து வெளிநாட்டவர் மரணம்!

கொழும்பில் இருந்து பதுளை நோக்கி பயணித்த உடரட்ட மெனிகே ரயிலில் பயணித்த எகிப்திய சுற்றுலாப் பயணி ஒருவர் பட்டிபொல ரயில் நிலையத்துக்கு அருகில் ரயிலில் இருந்து தவறி விழுந்து படுகாயமடைந்துள்ளார்.

பின்னர் அவர் நுவரெலியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் புதன்கிழமை இரவு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர் அஹமட் மொஹமட் அப்துல் ஹமிட் (வயது – 32) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த எகிப்திய பிரஜை, கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் சுற்றுலா பயணம் மேற்கொண்டு இலங்கை வந்து எல்ல ரயில் நிலையம் வரை உடரட்ட ரயிலில் பயணித்துக் கொண்டிருந்த போது இவ்வாறு தவறி விழுந்து காயமடைந்துள்ளார்.

நுவரெலியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வெளிநாட்டவர் மேலதிக சிகிச்சைக்காக அவரது நண்பர்களால் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வெளிநாட்டுப் பிரஜை தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார் என பட்டிபொல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.03.2022இல் வெளியிடப்பெற்றது.